## முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட

# அமைச்சர் பெருமக்கள் தலைமையில் குழுக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 13 -

**முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடிட அமைச்சர் பெருமக்கள் தலைமையில் 12 குழுக்கள் அமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் சூன் 2023 திங்கள் முதல் சூன் 2024 திங்கள் வரை தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22.5.2023 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களை பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்றும், மாதந்தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்திட வேண்டும் என்றும், பெரிய அளவிலான விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 2.6.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு, அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றிய திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு திறமைகள் கொண்ட பன்முக வித்தகர். அவர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரின் பரிமாணங்களைப் போற்றும் வகையில்

**இதழாளர் - கலைஞர்**
**எழுத்தாளர் - கலைஞர்**
**கலைஞர் - கலைஞர்**
**சமூக நீதிக் காவலர் - கலைஞர்**
**பண்பாட்டுப் பாசறை - கலைஞர்**
**ஏழைப் பங்காளர் - கலைஞர்**
**சட்டமன்ற நாயகர் - கலைஞர்**
**பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்**
**நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர்**
**நிறுவனங்களின் நாயகர் - கலைஞர்**
**தொலைநோக்குச் சிந்தனையாளர் - கலைஞர்**
**தமிழ்த்தாயின் தவப்புதல்வன் - கலைஞர்**

இத்தலைப்புகளில் அமைச்சர் பெருமக்கள் தலைமையில் இணைத் தலைவர்கள், உறுப்பினர் செயலர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அமைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இக்குழுக்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையை பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோருடன் இணைந்து எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பொது மக்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் விழாக்களாக அமைய வேண்டும் என்பதற்கான திட்டப் பணிகளை மேற்கொண்டு, அரசுடன் இணைந்து விழாக்களை சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

**டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் குழுக்கள்**

### 1. இதழாளர் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு. **மு.பெ.சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்

**இணைத் தலைவர்கள் :**

திரு.**செஞ்சிகே.எஸ்.மஸ்தான்** (சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்)

திரு.**த.மனோதங்கராஜ்** (பால்வளத்துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர் :**

திரு, **த.மோகன்,** இஆப., இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு

**உறுப்பினர்கள் :**

திரு. இந்து ராம்
திரு. நக்கீரன் கோபால்
திரு. கே.வைத்தியநாதன்
திரு. விஜய் சங்கர்
திரு. பாபு ஜெயக்குமார்
திரு. அருண்ராம்
திரு. கோவி. லெனின்
திரு. மு.குணசேகரன்
திரு. செந்தில்வேலன் (வேல் வீச்சு)

### 2. எழுத்தாளர் கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு.**கே.ஆர்.பெரியகருப்பன்** (கூட்டுறவுத் துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள்**

திரு.**அன்பில் மகேஸ் பொய்யாமொழி** (பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்ஸ்ர)

திருமதி **என்.கயல்விழி செல்வராஜ்** (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்ஸ்ர)

**உறுப்பினர் செயலர் :**

திருமதி **வே. அமுதவள்ளி**, இஆப., இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

**உறுப்பினர்கள் :**

திரு. ஆர். பூரணலிங்கம், இஆப. (ஓய்வு)
திரு. ஆர். பாலகிருஷ்ணன், இஆப. (ஓய்வு)
திரு. ஏ.எஸ். பன்னீர்செல்வன்
திரு. கலாப்பிரியா
திரு. எஸ். ராமகிருஷ்ணன்
திரு. திருமாவேலன்
திரு இமையம்
திரு. அறிவுமதி
திரு. வி.எம்.எஸ். சுபகுணராஜன்
கவிஞர் சல்மா
திரு. தமிழ்மகன்
திரு. பொதிய வெற்பன்

### 3. கலைஞர் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு.**உதயநிதி ஸ்டாலின்** இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

**இணைத் தலைவர்கள் :**

திரு. **ஆர்.காந்தி** (கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்)

திரு.**மா.சுப்பிரமணியன்** (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர் :**

முனைவர் **எம்.எஸ்.சண்முகம்**, இஆப., முதலமைச்சரின் செயலாளர்

**உறுப்பினர்கள்**

திரு. பா. விஜய்
திரு. சத்யராஜ்
திரு. நாசர்
திரு. கரு. பழனியப்பன்
திரு. ரா. முரளி
திரு. வாகை சந்திரசேகர்
திருமதி விஜயா தாயன்பன்
திரு. ராஜு முருகன்
திருமதி. ரோகிணி
திரு. யுகபாரதி
திரு. பொன்வண்ணன்
திரு. அருண் மோ

### 4. சமூக நீதிக் காவலர் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : முனைவர் **க.பொன்முடி** (உயர்கல்வித் துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள் :**

முனைவர் **பழனிவேல் தியாகராஜன்** (தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்)

டாக்டர் **மா.மதிவேந்தன்** (வனத்துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர்**

முனைவர் **தா. கார்த்திகேயன்**, இஆப., அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை

**உறுப்பினர்கள் :**

திரு .சுப. வீரபாண்டியன்
திருமதி அருள்மொழி
பேராசிரியர் இராமசாமி
முனைவர் இரா. சுப்பிரமணி
திரு. க. திருநாவுக்கரசு
திரு. ஏ.கே.எஸ். விஜயன்
திரு. அதியமான்
திரு. தீபக் நாதன்
திருமதி. ஓவியா
திரு. கோ. கருணாநிதி
திரு. மணிகோ. பன்னீர்செல்வம்
மருத்துவர் ஜீ.ஆர். ரவீந்திரநாத்

### 5. பண்பாட்டுப் பாசறை கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர் : எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்** (வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள் :**

திரு**கா.ராமச்சந்திரன்** (சுற்றுலாத்துறை அமைச்சர்)

திரு **பி.கே.சேகர்பாபு** (இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர் :**

மருத்துவர் **க.மணிவாசன்,** இஆப., அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை

**உறுப்பினர்கள்**

தவத்திரு. பொன்னம்பல அடிகளார்
திரு. ராமசுப்பிரமணியன்
திருமதி. நர்த்தகி நடராஜ்
மருத்துவர் சீர்காழி கோ. சிவசிதம்பரம்
மதுரா டிராவல்ஸ் திரு பாலா
திருமதி. சாரதா நம்பி ஆரூரன்
திருமதி. கல்யாணி
குடவாயில் திரு. பாலசுப்ரமணியம்
திரு. அஜயன் பாலா
திரு. ஸ்ரீராம் சர்மா
திரு. அமர்நாத் ராமகிருஷ்ணா
திரு. நீலகண்டன்

### 6. ஏழைப் பங்காளர் கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்:** திரு.கே.**கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்**, (வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள் :**

**சிவ.வீ.மெய்யநாதன்** (சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் )

திரு **சி.வி. கணேசன்** ( தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர்**

திரு.**எஸ்.கே.பிரபாகர்**, இஆப., கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை

**உறுப்பினர்கள்**

முனைவர் ஜெயரஞ்சன்
முனைவர் நாகநாதன்
திரு. திண்டுக்கல் ஐ. லியோனி
திரு. தமிழ் காமராசன்
திருமதி. பர்வீன் சுல்தானா
திரு. நாஞ்சில் சம்பத்
பேராசிரியர் சபாபதி மோகன்

### 7. சட்டமன்ற நாயகர் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு **மு.அப்பாவு,** (பேரவைத் தலைவர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்)

திரு. **எஸ்.எஸ். சிவசங்கர்** (போக்குவரத்து துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள் :**

திரு **கு. பிச்சாண்டி**, (சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர்)

முனைவர் **கோவி. செழியன்**, (அரசு தலைமைக் கொறடா, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்)

**உறுப்பினர் செயலர்**

முனைவர் **கி.சீனிவாசன்,** செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம்.

**உறுப்பினர்கள் :**

திரு. ஆர். ஆவுடையப்பன் (முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர்)
திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்
திரு. வேலூர் ஞானசேகரன்
திரு. த.ப. டில்லிதுரை (முன்னாள் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம்)
திரு. செல்வராஜ், (முன்னாள் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம்)
திரு. சுகுமார்

### 8. பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு. **துரைமுருகன்** (நீர்வளத்துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள்**

திரு. **சு.முத்துசாமி** (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்)

திரு. **அர.சக்கரபாணி** (உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர் :**

முனைவர் **சந்தீப் சக்சேனா,** இஆப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நீர்வளத் துறை

**உறுப்பினர்கள் :**

நீதியரசர் கே.சந்துரு
திருமதி. ஏ.ஏஸ்.குமாரி
திரு. சுந்தர ஆவுடையப்பன்
திரு. வே. மதிமாறன்
திரு. வாலாசா வல்லவன்
திரு. சூர்யா சேவியர்
திரு .செந்தலை கவுதமன்

### 9. நவீன தமிழ்நாட்டின் சிற்பி -கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு. **எ.வ. வேலு** (பொதுப் பணித் துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள்**

திரு. **ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்** )பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்)

திரு. **பி.மூர்த்தி** (வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர்**

டாக்டர் **பி. சந்தர மோகன்,** இஆப., (அரசு முதன்மைச் செயலாளர், பொதுப் பணித் துறை)


**உறுப்பினர்கள் :**

திரு, சுகி சிவம்
திரு, ஆர். சுப்பிரமணியம்
பேராசிரியர் விஜயபாஸ்கர்
பேராசிரியர் கலையரசன்
பேராசிரியர் இராம சீனிவாசன்
பேராசிரியர் ஜோதி சிவஞானம்
திருமதி ரூப்மதி
திரு ஓவியர் மருது
செல்வி தேன் சௌரிராஜன்
திரு ஏர்வாடி ராதாகிருஷ்ணன்
ஸ்தபதி திரு செல்வநாதன்

### 10. நிறுவனங்களின் நாயகர் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு.**கே.என். நேரு**



(நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள் :**

திரு **எஸ். ரகுபதி** (சட்டத் துறை அமைச்சர்)

திரு **தா.மோ. அன்பரசன்** (குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர்)

**உறுப்பினர் செயலர்**

திரு **பா. பொன்னையா**, இயக்குநர் இஆப., நகராட்சி நிருவாகம்

**உறுப்பினர்கள் :**

திரு. வேணு சீனிவாசன்
திரு. ஜி. விஸ்வநாதன்
மருத்துவர் சந்திரகுமார்
மருத்துவர் மோகன் காமேஸ்வரன்
திரு. மதிவாணன்
திரு. கிருஷ்ணராஜ் வானவராயர்

### 11. தொலைநோக்குச் சிந்தனையாளர் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு **இ. பெரியசாமி** (ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள் :**

திருமதி. **பி. கீதாஜீவன்** (சமூகநலம் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்)

முனைவர் **டி.ஆர்.பி.ராஜா** (தொழில்துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர் :**

முனைவர் **ப. செந்தில்குமார்,** இஆப., அரசு முதன்மைச் செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**உறுப்பினர்கள் :**

நீதியரசர் அக்பர் அலி ,
திரு சி.கே.ரங்கநாதன் ,
கவிஞர் ரவி சுப்பிரமணியம்
பேராசிரியர் இன்னாசிமுத்து
திரு.கால்டுவேல் வேள்நம்பி
கவிஞர் மனுஷ்யபுத்திரன்

### 12. தமிழ்த்தாயின் தவப்புதல்வன் - கலைஞர்

குழுவின் விவரங்கள்

**தலைவர்** : திரு **தங்கம் தென்னரசு** (நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்)

**இணைத் தலைவர்கள்**

திரு, **அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்** (மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்)

திரு **வி.செந்தில்பாலாஜி** (மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்)

**உறுப்பினர் செயலர்**

திரு,**த.உதயச்சந்திரன்,** இஆப., அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை

**உறுப்பினர்கள்**

கவிப்பேரரசு வைரமுத்து
திரு, ம. ராசேந்திரன்
திரு, பொற்கோ
பேராசிரியர் அருணன்
பேராசிரியர் இராஜன்குறை
பேராசிரியர் மருதநாயகம்
திரு, கலியபெருமாள்
திருமதி, பாரதி கிருஷ்ணகுமார்
திரு, அறவேந்தன்

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---



முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. மாநில மகளிரணி ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி த.காரல்மார்க்ஸ் நடத்திய தஞ்சை மேம்பாலம் அருகில் உள்ள செல்வராஜ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் இரண்டு நாள் நடைபெற்ற மாநில அளவிலான கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் பங்கேற்று கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசு மற்றும் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினார். இப்போட்டியில் 24 அணிகள் பங்கேற்றன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தி.மு.க. மாநில மகளிரணி ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி.காரல்மார்க்ஸ், தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. துணை செயலாளர் கனகவள்ளிபாலாஜி, பொறியாளர் எஸ்.ஜெயபார்வதி, போட்டி ஒருங்கிணைப்பாளர் சிபிநயினார், மருத்துவக் கல்லூரி பகுதி செயலாளர் .சதாசிவம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்..

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# சவுதி அரேபியா அபகாவில் இரத்ததான முகாம்!

## முருகதாஸ் - முன்னணியினர் பங்கேற்பு!

சவுதி அரேபியா, ஜூன் 13- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, சவுதி அபகாவில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவின் தொடக்கமாக சவுதி அரேபியா என்.ஆர்.டி.ஐ.ஏ. அபஹா தென்மண்டலம் சார்பாக அதன் அமைப்பாளர் முருகதாஸ் தலைமையில் அதன் நிர்வாகிகள் டேவிட், கமலஹாசன், இஸ்மாயில், தயா செபஸ்ட்டின், கணேசன் ஆகியோர் முன்னிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் சவுதி கமிஷ் சிவில் மருத்துவமனையில் இரத்ததானம் வழங்கப்பட்டது. இரத்ததான ஏற்பாடுகளை மருத்துவர் செல்வகுமார் முன்னின்று நடத்தினார்.

இரத்ததானம் வழங்குவதில் ஆர்வமுடன் திரளானோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து கமிஷ் அப்ஸரா உணவகத்தில் மதிய விருந்தும் நடைபெற்றது.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகர் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலிலும் மேயர் மாநகர செயலாளர் சண். ராமநாதன் ஆலோசனை பெயரிலும் குந்தவை நாச்சியார் மகளிர் கலைக் கல்லூரி அருகில் மாவட்டப் பொருளாளர் எல்.ஜி.அண்ணா முத்தமிழ் வித்தகர் தலைவர் கலைஞர் அவர்களின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி இனிப்புகள் வழங்கி கழகக் கொடியினை ஏற்றிவைத்தார். இவர்களுடன் 42வது வட்ட செயலாளர் இரா.இராஜமாணிக்கம், அ.லோகநாதன், எஸ். செல்வகுமார், வி.எஸ்.செந்தில்குமார், பாலமுருகன், பி.சந்திரசேகர், ஆட்டோ. பழனி, விக்னேஷ், சூர்யா மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.